**தலைப்பு 275 - பொலன்னறுவை மாட்ட செயலகம்**

**.......................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**......................................................**

பொலன்னறுவை மாட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பொலன்னறுவை மாட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

………………………………………………………………………………………………………

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

………………………………………………………………………………………………

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான

கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

………………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூறறுக்கள் மீதான கருத்துரைகள்

………………………………………………………

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுடன் இணங்கியிருக்காமை

…………………………………………………………………………………………

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………………… | …………………………… | ………………… |
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய SA71 SA81 மற்றும் SA 90 படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 3.1 அம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் 3.1 கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**..........................................**

**முற்பணக் கணக்கு மீதி**

**............................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதி நிலைமை கூற்றில் முற்பணக் கணக்கு மீதியாக ரூபா 107,489,611 காட்டப்பட்டிருந்த போதிலும் அது ரூபா 93,702,069 ஆக காட்டப்பட்டமையின் காரணமாக தேறிய சொத்துக்கள் ரூபா 13,787,542 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளிலிருந்து நானாவித முற்பணங்களின் தீர்த்து வைத்தல்கள் கழிக்கப்படாதிருத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**..................................**

**2.1 செலவு முகாமைத்துவம்**

**............................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அத்தியவசியமான அவசர செலவுகளுக்காக மாத்திர்ம் குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் 3 செலவு விடயங்களுக்காக ரூபா 367,000,000 தொகையான நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு 14 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு ரூபா 2,000 படியினை செலுத்துவதற்கும் பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்கு மற்றும் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்குமாக செலவு விடயங்களின் கீழ் குறைநிரப்பு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்ட தேவையான அளவிற்கு மாத்திரம் குறைநிரப்பு மதிப்பீட்டினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017(அ) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதற்காக செலுத்துவதற்கு உள்ள பணம் பொறுப்புக்களாக இனங்காணப்படவேண்டிய போதிலும் வழங்கல்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமாக செலுத்த வேண்டிய ரூபா 727,416,பணம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் மாவட்ட செயலகத்தினால் சுகாதார மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,508,875 தொகையான பொறுப்புக்களை இனங்கண்டு பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 (அ) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இடர் முகாமைத்துவ நிலையத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட பொலன்னறுவை மாவட்டத்தில் இடரினைக் குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,385,751 தொகை செலவு செய்து ஹிங்குரக்கொடை பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட எல்பி 04 பாலம் மற்றும் சிறிய வரகஹேன பாலத்தை மறுசீரமைப்புச் | கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வேலைப்பகுதியை நிர்மாணிப்பதற்கான நிதி ஏற்பாடு போதியதல்லாததுடன் ஹிங்ரக்கொடை பிரதேச சபையின் நேரடி நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் | அரசாங்கத்தின் நிதிவினைவற்று இருக்காத வகையில் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நிர்மாண செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தி முடிவுறுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதன் கீழ் பாலத்தின் இரு பக்கத்திலும் மண் நிரப்புதல் இடம்பெற்றிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதிவரை பொலன்னறுவை மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்தில் முறையே 11 சங்கங்கள் மற்றும் 45 சங்கங்கள் செயற்பாடற்றவை என இனங்காணப்பட்டிருந்தன. அச்சங்கத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், இயலளவை அபிவிருத்தி செய்தல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் நிதியங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 14,685,474 மொத்த தொகை வங்கி கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டன. | கணக்குகளில் காணப்பட்ட நிதிகளை பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைப்பதற்கு அல்லது செயற்படும் மட்டத்திற்கு கொண்டுவரக்கூடிய சங்கங்களில் நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சங்கங்களை செயற்படும் மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிகளைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கிராம சக்தி தொழில் முயற்சியின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்தில் செயற்பாடுள்ள சங்கங்களுக்கு வழங்கிய முறையே ரூபா 4,578,358 மற்றும் ரூபா 704,347 தொகைகள் வங்கி கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டன. | விளைவற்றுக் காணப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவது சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்கள்

.................................................................................................................................................

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ............................................. | ................................... | ...................... |
| **(i)** | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டை முறையாக அமுல்ப்படுத்துவதற்காக விளைதிறனான நடைமுறை உள்ளது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 2.6 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்

………………...................................……………………………………………

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இனக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| ……………….. | | ............ | ............. | ……………… | …… |
| | | ரூபா<br>............. | | | |
| (அ) | 1958 இன் 29 ஆம் இலக்க மற்றும் 1964 இன் 20 ஆம் இலக்க மிருகங்களை அறுத்தல் அதிகாரச் சட்டம். | - | ஒரு நாளுக்குள் மிருகங்களை எடுத்துச் செல்ல வேண்டிய போதிலும் தமன்கடுவ வெலிகந்த மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களால் பசுக்களை எடுத்துச் செல்வதற்காக சில நாட்கள் எடுக்கும் வகையில் 98 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | வெலிகந்த பிரதேச செயலகத்தினால் உரிய அனுமதிப்பத்திரத்தில் நேரத்தை குறிப்பிட்டு ‘‘அந்த நாளில் மாத்திரம் எடுத்துச் செல்லல் செல்லுபடியாகும்’’ என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் மெரிகிரிய பிரதேச செயலகத்தினால் புலனாய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் எதிர்காலத்தில் இப்பிழையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 | 1,386,622 | சேவையை கைவிட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரண்டு ஊழியர்கள் மூன்று ஊழியர்கள் | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என | தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் மற்றும் 4.6 ஆம் பந்திகள் மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | | மற்றும் அறவிட வேண்டிய முறையே ரூபா 225,075, ரூபா 753,509 மற்றும் ரூபா 408,048 தொகைகள் தொடர்பாக தாபனவிதிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவிக்கப்பட்டது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 396(இ) | 1,183,346 | 2019 யூன் 26 ஆந் திகதியிலிருந்து 2021 யூலை 30 ஆந் திகதி வரை 06 மாத காலத்தை மிகைத்து 63 காசோலைகள் பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு வங்கி கணக்கிணக்கம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 சனவரி 03 ஆந் திகதி திவிநெகும சமூக அடிப்படை வங்கி நிகழ்ச்சித்திட்டம் என்ற தலைப்பில் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் 8.5 ஆம் பந்தி | - | வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களால் கடன் தொகை ரூபா 250,001 இலிருந்து ரூபா 1,000,000 வரையான எல்லைக்குள் வழங்கப்படுகின்ற கடனுக்காக அசையும்/ அசையா ஆதனங்களை பிணையாக வைக்க வேண்டியதுடன் அச்சொத்துக்கள் சமூர்த்தி வங்கியின் பெயரில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். எனினும் வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்கள் கடனை வழங்கும் போது பிணையாக வைக்கின்ற சொத்துக்களை பதிவு செய்து கொள்ளாது | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சொத்துக்களை வங்கியின் பெயரில் பதிவு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கியிருந்தன. இதன் காரணமாக கடனை செலுத்த தவறும் போது உரிய சொத்துக்களை வங்கியின் பெயரில் எடுத்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (உ) | 2014/7 ஆம் இலக்க திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் திவிநெகும சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவு | 3,385,327 | வீடமைப்புக் கடன் (மனைப் பிரிவுக் கடன்) வழங்கக்கூடிய உச்ச அளவு எல்லை ரூபா 300,000 ஆகக் காட்டப்பட்டிருந்தும் முகாமைத்துவத்தின் தற்றுணிபின் பேரில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது பதினொரு நபர்களுக்கு ரூபா 500,000 வீதம் மனைப்பிரிவு கடன் ரூபா 5,500,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. அக்கடன்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,385,327 மொத்த தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ஐயக் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

........................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ................................................ | | .................................. | ...................... |
| (அ) | எலஹர பிரதேச செயலகத்தில் ஐந்து சமுர்த்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிகளிலில் இன்னும் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து | உரிய உத்தியோகத்தர்களால் ரூபா 1,758,450 பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை அறவீடு செய்யும் முறைமை | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கும் பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்க |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய பணம் ரூபா 652,167 தொகை 2022 மே வரையும் அறவிடப்படவில்லை. | தொடர்பாக ஒழுக்காற்று அறிவித்தலில் குறிப்பிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | ளுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திம்புலாகல பிரதேச செயலகத்தில் 2018 யூன் 11 ஆந் திகதியிலிருந்து 2021 மே வரையான காலத்தில் முதியோர் படிகளும் சிறுநீரக படிகளும் செலுத்தும் போது இடம்பெற்ற ரூபா 2,443,600 தொகையான நிதி ஒழுங்கீனங்களை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யவேண்டி இருந்தும் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் பட்டோலையின் கீழான ஒரு குற்றமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தர் சம்பந்தமாக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் எதுவித முறையான ஒழுக்காற்று விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | தொடக்க புலனாய்வு அறிக்கையும் குற்றப்பத்திரத்தின் வரைபும் முறையான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

....................................

**3.1 திட்டமிடல்**

....................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................... | ......................... | ...................... |
| தமன்கடுவ பிரதேச செயலகத்தில் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 08 செயற்திட்டங்களுக்குப் பதிலாக ஏனைய 07 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அதற்கிணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பிரதான செயற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள்

.................................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ............................................... | .......................... | ...................... |
| கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பங்களுக்கு ரூபா 5,000 படியானது பிரதம மந்திரியின் மேலதிக செயலாளரின் PTF/03/2021 ஆம் இலக்க 2021 ஏப்ரல் 10 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்டது. அதன் போது சமூர்த்தி நலன் பெறுனர்களுக்கு உரிய படிகளை வழங்கும் போது மாதாந்தம் ரூபா 22,000 பயிற்சிப் படியினை மாதாந்தம் பெற்றுக்கொண்டிருந்த பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிலுனர்களுக்கும் ரூபா 5,000 தொகையான அப்படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 19 வங்கிச் சங்கங்களுக்கு உரிய 421 குடும்பங்களுக்கு ரூபா 4,190,000 செலுத்தப்பட்டிருந்தது. | பல்நோக்கு அபிவிருத்தி பயிற்சி உதவியாளர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு அப்படிகளை வழங்க வேண்டாம் என சமூர்த்தி பணிப்பாளர் நாயகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. | வருமானங்களை இழந்த குடும்பங்களுக்கு மாத்திரம் உரிய நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

.................................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ............................................... | .......................... | ...................... |
| திம்புலாகல பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2019 இன் கீழ் 37 உத்தியோகத்தர்களுக்கு | நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் அச்செயற்பாட்டிற்காகவே ஈடுபடுத்தப்பட்டனவா என்பதனை பின்தொடர் | நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் போது முறையாக ஆய்வு செய்து தேவைப்பாடு காணப்படுகின்ற நலன் |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட 496 கூரைத் தகடுகள் மற்றும் 15 நலன் பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட 189 சீமெந்து பேக்குகளை மற்றையவர்களுக்கு வழங்குதல், விற்பனை செய்தல், காணாமல் ஆக்குதல் என்பன இடம்பெற்றிருந்ததுடன் 247 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 3,679 கூரைத்தகடுகளும் 54 சீமெந்து பேக்குகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | நடவடிக்கை எடுத்து பார்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. | பெறுனர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

.........................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................... | ........................... | ...................... |
| (அ) ஹங்குரக்கொட மற்றும் லெஹெர மின்சார வேலிகளுக்கு அருகாமையில் 28 காவல் நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது ரூபா 22,949,234 தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 20 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அளவீட்டுப் பட்டியலில் 29 விடயங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 13,552,179 தொகையான வேலைப் பகுதிகள் ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக செலவு செய்யப்பட்ட ரூபா 6,556,819 | உரிய செயற்பாடுகளை துரிதமாக பூர்த்திசெய்து மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்குமாறு ஒப்பந்தக்காரருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் இல்லையாயின் கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயலாற்றல் பிணையை நீடிக்காமை சம்பந்தமாக பொறுப்புக் கூறக்கூடிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை விளைவற்ற செலவாக இருந்தது. மேலும் கைதவிர்ப்புச் செய்தல் சம்பந்தமான உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,074,645 மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணைக் காலம் காலாவதியாகியிருந்ததுடன் காலம் நீடிக்கப்படாமையின் காரணமாக ஒப்பந்தத்தை கைவிட்டுச் சென்றமை சம்பந்தமான நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இது சம்பந்தமாக பொறுப்புக் கூறக்கூடிய நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஹிங்குரக்கொட பிரதேசிய செயலகத்தில் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 6,848,004 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த 06 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 10 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது. | ரூபா 6,848,004 மொத்த பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்ட 06 செயற்திட்டங்களின் வேலைகள் முடிவுறுத்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கை செயற்பட்ட செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.5 **செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

**………………………………………………………………………………**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………………… | …………………… | ………………… |
| (அ) | மாவட்ட செயலகத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட திம்புலாகல யானை வேலிக்கு அருகாமையில் 13 காவல் நிலையங்களை நிர்மாணித்தல் 2022 சனவரி 30 ஆந் திகதி முடிவுறுத்தப்படவேண்டிய போதிலும் அளவீட்டுப் பத்திரத்திலுள்ள ரூபா 3,422,064 தொகையான 8 விடயங்கள் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விரைவாக வேலையை பூர்த்திசெய்து தருமாறும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் ஒப்பந்த நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | கிராமங்களுடன் நட்புறவாக இருத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் 2021 இன் மூலம் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வெடிகச்சிய பிரதேசத்தில் 02 விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 25 ஆந் திகதி வேலைகள் பூர்த்திசெய்யப்படவேண்டிய போதிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் பிழையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது என சிபாரிசு செய்யப்பட்டது என்பதன் அடிப்படையில் இறுதி விலைப்பட்டியல்களுக்காக ரூபா 4,486,004 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 மார்ச் 08 ஆந் திகதி வரை | செயற்திட்டத்தின் வேலைகளை மிகவும் துரிதமாக முடிவுறுத்தி பொதுமக்களுக்கு வழங்கும் குறிக்கோளில் செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்தி பயன்படுத்துவதற்கு வழங்குவதற்காக பணம் செலுத்தப்பட்டுள்ளது. | பிழையான தகவல்களை சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை மிகைத்து 72 நாட்கள் கடந்திருந்தும் அதற்காக அறவிட வேண்டிய ரூபா 80,748 தொகையான தாமதக் கட்டணத்தை கழிப்பதற்கும் மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.6 பெறுகைகள்**

.................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ................................................ | | .................................... | ...................... |
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மற்றும் பெறுகைக் கையேட்டின் 4.2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தமன்கடுவ மற்றும் எலஹெர பிரதேச செயலகங்களால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 38,739,927 மொத்த தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 செயற்திட்டங்களின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிர்மாணத்தை முடிவுறுத்தாமையின் அடிப்படையில் 1,067,937 தாமதக் கட்டணம் பிரதேச செயலாளரினால் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2022 மே மாதம் வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணம் அறவிட வேண்டிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அதனை அறவீடு செய்வதற்கும் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்லுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வது நியாயமற்றது என தெரிவிக்கின்ற ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக மேலும் கருத்தில் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் தாமத் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

.....................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ................................................ | .................................. | ...................... |
| (அ) | வெலிகந்த பிரதேச செயலகத்தின் 04 வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு முடியாதுவிடின் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டன. | இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பவுசர்கள் சம்பந்தமாக மீளாய்வுச் சபையின் மூலம் வழங்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையிலும் உழவு இயந்திரம் சம்பந்தமாக சமூக சேவை திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சிபார்சுகளின் அடிப்படையிலும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | திருத்தங்கள் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கும் அல்லது முறைப்படியாக விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னேற்றுவோம் பொலன்னறுவை செயற்திட்டத்தின் மூலம் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,450,194 பெறுமதியான பொறியியல் பொருட்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் அப்பொருட்கள் விளைவற்று மாவட்ட செயலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அலுவலக பராமரிப்பிற்காக இந்த உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. | பொறியியல் பொருட்களை பதிவேட்டிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விளைவற்றுக் காணப்படும் பொருட்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1983 ஆம் ஆண்டிலிருந்து 2021 யூன் வரையான காலத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபையினால் வாடகை மாற்றல் அடிப்படையில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு 2021 யூன் மாதமளவில் மதிப்பீட்டுப் | வீடுகளின் உரிமையை மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்குமாறு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டது. | மதிப்பீட்டுப் பெறுமதி செலுத்தி முடிவடைந்துள்ள வீடுகளின் உரிமையை மாவட்ட செயலகத்தினால் பொறுப்பேற்பதற்கும் மிகையாகச் செலுத்திய பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியினை மிகைத்து 07 வீடுகளுக்கு ரூபா 215,226 செலுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டுப் பெறுமதியை செலுத்தி முடிவுறுத்தியுள்ள வீடுகளின் உரிமையை மாவட்ட செயலகத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உடைத்து அகற்றிய 6 ஆம் இலக்க வீட்டிற்காக ரூபா 69,998 பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மீள அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகை மாற்றல் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 08 அரசாங்க வீடுகளுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் செலுத்த வேண்டிய வீட்டு வாடகை ரூபா 3,525 ஆக இருந்த போதிலும் அந்த 08 வீடுகளுக்கான மாதாந்த வாடகையாக அறவிடப்படுகின்ற ரூபா 28,912 மொத்த தொகையை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததனால் மாதாந்த வாடகையை மிகைத்து வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட மொத்த பணம் எவ்வளவு என்பதனை இனங்காண்பதற்குரிய பதிவேடுகள் மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது பதிவேடுகள் பேணப்பட்டு வருகின்றன. | மாதாந்த வாடகையை சரியாக இனங்கண்டு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

## 3.8 நட்டங்களும் சேதங்களும்

.......................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | ................................................ | ................................... | ...................... |
| (அ) | 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட சிறிய மற்றும் மத்திய அளவிலான ஆலைச் சொந்தக்காரர்களை | ரூபா 140.4 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதிக் கடனை செலுத்தத் தவறியமை சம்பந்தமாக | பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலனறுவை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 206 மில்லியன் தொகையில் பணமாக இன்னும் அறவிட வேண்டிய ரூபா 65.6 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு தெரியப்படுத்தியிருந்தும் 2022 மே மாதம் வரை அப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் பேணப்பட்டு வந்த 43 கருங்கல் வேலைத்தளங்களிலிருந்து அரசாங்க காணிகளில் கனிய வளப் பொருட்களைச் சேகரிக்கும் கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 142,191,147 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உச்ச நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளவாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் அரசிறைகள் அறவிடப்பட்டுள்ளன. | உரிய கட்டணத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பொலன்னறுவையை முன்னேற்றுவோம் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் நலன்பெறுனர்களுக்கு வழங்குவதற்காக மாவட்ட செயலகத்தின் மூலம் கொள்வனவு செய்து பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூரைத் தகடுகளில் பழுதடைந்த கூரைத் தகடுகள் 864 ஆகும். அவற்றினை கொள்வனவு செய்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தம் தகடுகளை மீள ஒப்படைத்து புதிய தகடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கூரைத் தகடுகளின் நிகழ்கால சந்தைப் பெறுமதி ரூபா 3,554,345 ஆகும். | வழங்குனர்களிடமிருந்து புதிய கூரைத் தகடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது. | வழங்குனர்களிடமிருந்து புதிய கூரைத் தகடுகளை பெற்றுக்கொள்வதற்கு அல்லது பணத்தை அறவீடு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை தீர்த்துவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தினால் பயன்படுத்துகின்ற ஒரு வாகனம் 2005 பெப்ரவரி 09 ஆந் திகதி இடம்பெற்ற விபத்தினால் ஏற்பட்ட ரூபா 250,000 நட்டத்திற்காக விபத்தினை ஏற்படுத்திய தரப்பினரின் மூன்றாந் தரப்பினர் காப்புறுதியின் மூலம் ரூபா 100,000 பணத்தை வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அப்பணத்தையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மூன்றாந் தரப்பினர் காப்புறுதிக்காக வழங்கப்பட்ட ரூபா 100,000 பணம் காப்புறுதி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் நட்டத்தின் மிகுதிப் பெறுமதியை லொறியின் சாரதி இணைத்துக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனத்தினால் செலுத்த வேண்டும் என டெலிகொம் நிறுவனத்தினால் மாவட்ட செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மூன்றாந் தரப்பினர் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.9 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை**

.......................................................................................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................................ | .................................... | ...................... |
| மாவட்ட செயலகத்திற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள் முறையே ஒன்று மற்றும் ஐந்திற்கு 2022 யூன் 21 ஆந் திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பதில் வழங்கப்படுதல் வேண்டும். |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

**...................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ................................................ | | ................................... | ...................... |
| (அ) | பிரதேச செயலகங்களினூடாக 2019/20 பெரும்போகம், 2020 சிறுபோகம், 2020/21 பெரும்போகம் என்பவற்றிற்காக சிறிய அளவிலான அரிசி ஆலைகளினூடாக நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல்லைப் பெற்றுக்கொண்ட 44 ஆலைச் செந்தக்காரர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட 1,521,337 கிலோகிராம் நெல்லை அரிசியாக்கி அரசாங்கத்திற்க வழங்கப்படாமையின் காரணமாக இன்னும் அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய பணம் ரூபா 85,181,090 ஆக இருந்தது. இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய அரிசிகளின் பெறுமதிக்கு பணத்தை செலுத்துமாறு ஆலைச் சொந்தக்காரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது டன் கொடுப்பனவு செய்யத் தவறிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய அரிசி இருப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அதன் பெறுமதிக்கு பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் 2 ஆண்டுகளை மிகைத்துள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஓவூதியம்<br>............... | | |
| | (i) 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 8/2010 ஆம் இலக்க மற்றும் 2014 சனவரி ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைளயின் பிரகாரம் வாழ்வாதார செலவுப் படிகளுடன் அரசாங்கத்தில் சம்பளம் பெறுவதாயிருந்தால் அந்த சம்பளம் பெறும் கால எல்லையில் ஓய்வூதியமும் பெறுவதாகயிருந்தால் ஓய்வூதியத்திற்காக வாழ்வாதார செலவுப் படிக்கு தகமையற்றிருத்தல் வேண்டும். இதற்கு முரணாக | மிகைக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாக செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 55 வயது வரை இலங்கை இராணுவப்படையினால் சம்பளமும் ஆறு உத்தியோகத்தர்களுக்கு தமன்கடுவ மற்றும் எலஹெர பிரதேச செயலகங்களின் படிகளும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா 1,225,242 தொபை மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டது. | | |
| (ii) மீண்டும் திருமணம் செய்கின்ற விதவைக்கு ஓய்வூதியம் செலுத்தும் போது விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்திலிருந்து 50 சதவீதம் செலுத்தப்படுமாகவிருந்தால் அது ஓய்வூதியத்துடன் செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளில் 50 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாது தமன்கடுவ பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற ஒரு நலன்பெறுனர் மீண்டும் திருமணம் செய்ததன் பின்னரும் அவருக்குச் செலுத்தப்பட்ட மிகைப் பணத்தைக் கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே எலஹெர பிரதேச செய்லகத்தின் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற மரணமடைந்த இராணுவ வீரரின் விதவைக்கு மீண்டும் திருமணம் செய்ததன் பின்னரும் அதாவது 2019 சனவரி 10 ஆந் திகதியிலிருந்து 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்திற்காக ரூபா 237,942 தொகை மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் உரிய ஓய்வூதியக் கோவை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எலஹெர பிரதேச செயலகத்தினால் கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | மிகையாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக மரணமடைந்த பொலிஸ் சார்ஜன் சாரதிக்கு வழங்கிக் கொண்டிருந்த சம்பளமும் படிகளும் 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதியிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தும் வெலிகந்த பிரதேச செயலகத்தின் மூலம் அவரின் விதவைக்கு தகமையுள்ள விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் தகைமை பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தினால் விதவைக்கு சம்பளமும் படிகளும் தகமை பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க பொலிஸ் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தை விரைவாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) அறவிட வேண்டிய பணம்

.........................................

| | | |
|---|---|---|
| (i) 22 சமூர்த்தி வங்கிச் சங்கங்கள் 3,224 தனிப்பட்ட கணக்குகளின் மூலம் அறவிடவேண்டிய ரூபா 93,553,053 தொகையான கடன் பணம் 2021 யூன் 30 இல் உள்ளவாறு ஐயக் கடனாகமாறியிருந்தது. | ஐயக் கடனின் அளவை குறைப்பதற்கு துரித நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட சமூர்த்தி பணிப்பாளரினால் (பதில்) அறிவிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | கடனை வழங்கும் குறிக்கோள், தேவைப்பாடு கடனை தீர்க்கும் இயலுமை, செயற்திட்டத்தின் சாத்திய வளம் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி கடன் வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பின் தொடர் நடவடிக்கை எடுத்து கடனை அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ii) மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான III ஆம் தரத்திலுள்ள 01 ஆம் இலக்க அரசாங்க இல்லத்தில் குடியிருக்கும் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 85,857 தொகையான நிலுவை வீட்டு வாடகை அறவீடு செய்ய வேண்டியிருந்தது. | வீட்டு வாடகை மற்றும் தண்ட வாடகையை அறவிட்டு அனுப்பிவைக்குமாறு கலாச்சார அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டது. | நிலுவையான வீட்டு வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் மீண்டும் மீளமைப்புச் செய்யும் அடிப்படையில் கொரோனா தொற்று நோயின் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகிய சமுர்த்தி நலன்பெறுனர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரண நடவடிக்கைக்கும் நிவாரண எழுச்சிப் படிக் கொடுப்பனவுக்குமான சமூக அடிப்படை சமுர்த்தி வங்கிச் சங்கங்களிலிருந்த நிதிகளிலிருந்து ரூபா 185,355,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 182,834,000 தொகையை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி ஏற்பாடு கிடைத்த உடன் சமுர்த்தி வங்கிக்கு கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் உரிய பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) காணிப் பிரிவின் செயலாற்றல்

..................................................

| | | |
|---|---|---|
| (i) எலஹெர, ஹிங்குரக்கொட, தமன்கடுவ, மெதிரிகிரிய மற்றும் லங்காபுர பிரதேச செயலகங்களினால் அளவீட்டு நடவடிக்கைக்காக நில அளவைத் திணைக்களத்திற்கு 2013 இலிருந்து 2021 வரை அனுப்பிவைக்கப்பட்ட 468 நில அளவை வேண்டுதல்களுக்கு மத்தியில் 366 வரைபடங்கள் இன்னும் கிடைத்திருக்கவில்லை. | ஹிங்குரக்கொட, எலஹெர, மெதிரிகிரிய தமன்கடுவ, லங்காபுர ஆகிய பிரதேச செயலகங்களால் பிரிவு மட்டத்தில் நில அளவை வேண்டுதல்களை ஒன்று சேர்த்து மீண்டும் நில அளவைத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | நில அளவை வேண்டுதல்களுக்கான வரைபடங்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி முறையான வேலைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும். |
| (ii) 2016 இலிருந்து 2019 வரையான காலத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 391 தனியார் காணித் துண்டுகளுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இழப்பீட்டுப் | நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் காணித் துண்டுகளுக்காக இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | விரைவாக இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1950 இன் 09 ஆம் இலக்க காணிகளை சுவீகரிக்கும் அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப பணிப்புரையை வர்த்தமானியில் வெளியிட்ட திகதியிலிருந்து இழப்பீட்டுப் பணத்தை செலுத்திய திகதி வரையான காலத்திற்காக ஒரு ஆண்டிற்கு 7 சதவீதம் வட்டியுயுடன் இழப்பீட்டுப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டது. இந்த தாமதத்தினுள் அரசாங்கத்தினால் தேவையற்ற செலவுப் பொறுப்பினை ஏற்க வேண்டி இருந்ததுடன் காணிகளின் உரிமையாளருக்கு நிர்ணயிக்கப்பட்ட நலன்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | |
| (iii) | எலஹெர பிரதேச செயலகப் பிரிவிற்குரிய காணிகள் தேசிய புனித பூமியாக வெளியிடப்பட்டுள்ளதுடன் அக்காணிகளில் தற்பொழுது வசித்துவரும் காணிச் சொந்தக்காரர்கள் சம்பந்தமாக பொருத்தமானவற்றைச் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அக்காணிகளைப் பயன்படுத்துக்கின்ற அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் 2019 இலிருந்து 2021 வரையான காலத்தில் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 1,352 விண்ணப்பங்களுக்காக காணிக் கச்சேரிகளை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2000 ஆம் ஆண்டின் 14.5 ஆம் இலக்க வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ள எல்லைகளை அடையாளமிடுதல், சம்பந்தமாக நில அளவைத் திணைக்களத்தின் மூலம் நில அளவை செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்பதனை தேடிக்கண்டுபிடிப்பதற்கு பிரதேச செயலாளரினால் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகருக்கு தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் தேசிய புனித பூமியாக வெளியிடப்பட்ட இக்காணிக்காக காணிக் கச்சேரியினை நடாத்துவதற்காக வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் | வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்துடன் உரிய விடயத்தை விரைவாக திர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணக்கப்பாட்டினை வேண்டி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (iv) | மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்கு 01 ஆண்டிற்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக ரூபா 1,738,988 தொகையான குத்தகைப்பணத்தை செலுத்திய 12 குத்தகைக் காரர்கள் தொடர்பாக காணி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட குத்தகைகள் இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. | காணி ஆணையாளர் நாயகத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | காணி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட குத்தகையை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 22 சமூர்த்தி வங்கிச் சங்கங்கள் தொடர்பாக 2021 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்பாடற்ற 19,437 வங்கிக் கணக்குகளில் ரூபா 61,967,268 மீதி காணப்பட்டது. இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு பரீட்சிப்பபுக்களுடன் இணங்குவதாக தெரிவிக்கப்பட்டது. | செயற்பாடற்ற வைப்புக்களை செயற்படும் மட்டத்திற்கு மாற்றுவதற்கு வாடிக்கையாளர்கள் முன்வருதல் வேண்டும். |

**4. நல்லாட்சி**

.....................

**4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

.........................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ................................................ | | .................................... | ...................... |
| (அ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 153 காட்டு யானை சேதங்களுக்காக இழப்பீட்டினைச் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற என தெரிவிக்கப்பட்டது. | இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு இழப்பீட்டினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தமன்கடுவ பிரசேத செயலகத்தில் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் இரண்டாவது கட்டத்தின் கீழ் தகமை பெற்ற 201 விண்ணப்பதாரர்களில் 29 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட 58 விண்ணப்பதாரர்களுக்கு மத்தியில் 15 விண்ணப்பதாரர்களுக்கே நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதியான 43 நியமனதாரர்கள் 6 இற்கும் 28 இற்கும் இடைப்பட்ட மதிப்பீட்டுப் புள்ளிகளை பெற்றுக்கொண்டவர்களாக இருப்பதனால் பயிலுனர்களை தெரிவு செய்யும் நடைமுறை வெளிப்படை தன்மையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நியமனதாரர்களை தெரிவு செய்தலானது பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | நேர்முகப் பரீட்சைகளின் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யும் நடைமுறையானது வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**5. மனித வளங்கள் முகைமைத்துவம்**

...........................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ................................................ | .................................... | ...................... |
| (அ) | மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் சிரேஷ்ட மட்டத்தில் 11 பதவியினர் வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 14 வெற்றிடங்களும் இரண்டா மற்றும் ஆரம்ப மட்டங்களில் 234 வெற்றிடங்களும் காணப்பட்டன. அவ்வாறே இரண்டாம் மட்டத்தில் மிகைப் பதவியினர் எண்ணிக்கை 16 ஆகும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | பொது மக்களுக்கு உயர்ந்த சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான வகையில் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலகங்களில் 66 சமுர்த்தி முகாமைத்துவ பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் 25 வெற்றிடங்கள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. 05 | காணப்படுகின்ற வெற்றிடங்கள் சம்பந்தமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | -மேற்படி- |

ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 09 சமூர்த்தி முகாமையாளர்கள் பதில் கடமை பதவிகளில் ஈடுபட்டுள்ளனர்.